### தங்கச்சிமடம் – குந்துகால் – பாம்பன் வடக்கு மீனவக் கிராமங்களில்

### பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளுக்கு – முதல்வர் ரூ.360 கோடி ஒதுக்கீடு!

# மீனவர் சங்கங்களின் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றிய - முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

### இராமநாதபுரம் மாவட்ட நிர்வாகிகள் – முதல்வரை நேரில் சந்தித்து தெரிவித்தனர்!

### இலங்கை கடற்படையால் தமிழ்நாட்டு மீனவர்கள் கைது – நிரந்தரத் தீர்வு காண வலியுறுத்தல்!

**சென்னை, பிப்.20-**

**தங்கச்சிமடம் மீன் இறங்கு தளம் மீன்பிடித் துறைமுகமாக தரம் உயர்த்துதல், குந்துகால் மீன் இறங்குதளத்தை தூண்டில் வளைவுடன் மேம்படுத்துதல் மற்றும் பாம்பன் வடக்கு மீனவ கிராமத்தில் தூண்டில் வளைவு அமைத்தல் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட தமிழ்நாடு அரசின் நிதியிலிருந்து 360 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்.**

**இராமநாதபுரம் மாவட்ட மீனவர் சங்கங்களின் நிர்வாகிகள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களைச் சந்தித்து, தங்களது பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றியதற்காக நன்றி தெரிவித்து, இலங்கைக் கடற்படையால் தமிழ்நாடு மீனவர்கள் கைது செய்யப்படுவதைத் தடுத்திட ஒன்றிய அரசை தொடர்ந்து வலியுறுத்தி, இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக் கொண்டு கோரிக்கை மனு அளித்தனர்.**

அதன் விவரம் வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (18.2.2025) தலைமைச் செயலகத்தில், இராமநாதபுரம் மாவட்ட மீனவர் சங்கங்களான இராமேஸ்வரம் அனைத்து விசைப்படகு மீனவர் சங்க ஆலோசகர் என்.தேவதாஸ் மற்றும் பாய்வா, ஏ.பி.முருகன், தங்கச்சிமடம் அனைத்து விசைப்படகு நாட்டுப்படகு மீனவர் சங்கத்தின் தலைவர் வி.பி. சேசுராஜா, பொருளாளர் ஆர்.சகாயம், இணை செயலாளர் பி. ஆல்வின், பாம்பன் நாட்டுப்படகு மீனவர் நல உரிமைச் சங்கத்தின் தலைவர் எஸ்.பி. ராயப்பன், நிர்வாகி ஆரோக்கிய தீபக், மண்டபம் அனைத்து விசைப்படகு சங்க நிர்வாகிகள் ஜாகீர் உசேன், வாசீம், விஜின் ஆகியோர் சந்தித்து, இலங்கைக் கடற்படையால் தமிழ்நாட்டு மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதையும், மீனவர்களின் மீன்பிடி படகுகளை பறிமுதல் செய்வதையும் தடுத்திட ஒன்றிய அரசை தொடர்ந்து வலியுறுத்தி, இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக் கொண்டு கோரிக்கை மனு அளித்தனர்.

இராமநாதபுரம் மாவட்ட மீனவப் பிரதிநிதிகளுடனான இச்சந்திப்பின் போது, முதலமைச்சர் அவர்கள், மீனவச் சமுதாய மக்களின் கோரிக்கையினை ஏற்று,

18-8-2023 அன்று மண்டபத்தில் நடைபெற்ற மீனவர் நல மாநாட்டில் பங்கேற்றபோது அளிக்கப்பட்ட கோரிக்கைகளை ஏற்று, அது தொடர்பாக பல்வேறு அறிவிப்புகளை அந்த மாநாட்டிலேயே அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்புகளை நிறை வேற்றும் வகையில், மீனவ மக்களுக்கான கூட்டுறவு கடன் திட்டத்தின் கீழ் 77,402 நபர்களுக்கு 1,198.79 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது. 6,242 மீனவர்களுக்கு வீடுகளுக்கான பட்டா வழங்கப்பட்டுள்ளது, மீன்பிடி தடைக்காலத்திற்கான நிவாரணத்தொகை ரூ.8000/ மாக உயர்த்தப்பட்டு, 60 வயதிற்கு மேற்பட்ட மீனவர்கள் உட்பட 1.80 இலட்சம் மீனவ குடும்பங்களுக்கு 143 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது, மீன்பிடி படகுகளுக்கான மானிய விலையிலான டீசல் விசைப்படகுகளுக்கு 18,000 லிட்டரிலிருந்து 19,000 லிட்டராகவும், நாட்டுப்படகுகளுக்கு 4,000 லிட்டரிலிருந்து 4,400 லிட்டராகவும் மற்றும் மண்ணெண்ணெய் 3,400 லிட்டரிலிருந்து 3,700 லிட்டராகவும் உயர்த்தப்பட்டு நடப்பாண்டில் வழங்கப்பட்டுள்ளது, மீன்பிடி படகுகளுக்கு 1,000 வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன, மீனவர் குழு விபத்துக் காப்புறுதி திட்டம் செயல்பாட்டில் இல்லாத காலகட்டத்தில் இறந்த 205 மீனவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் மற்றும் சுழல் நிதியமாக ரூ 3.53 கோடி வழங்கப்பட்டுள்ளது, மீனவர்களுக்கான வீட்டுவசதி திட்டத்தின் கீழ் அலகுத் தொகையானது ரூ. 1.70 இலட்சத்திலிருந்து ரூ. 2.40 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது என்றும்;

அதேபோன்று, இராமநாதபுரம் மாவட்ட மீனவர்களின் முக்கிய கோரிக்கைகளான தங்கச்சிமடம் மீன் இறங்கு தளம் மீன்பிடி துறைமுகமாக தரம் உயர்த்துதல், குந்துகால் மீன் இறங்குதளத்தை தூண்டில் வளைவுடன் மேம்படுத்துதல் மற்றும் பாம்பன் வடக்கு மீனவ கிராமத்தில் தூண்டில் வளைவு அமைத்தல் ஆகிய திட்ட செயல்பாட்டிற்கான சாத்தியக்கூறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும்;

அதன் அடிப்படையில், இதுபோன்ற உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீடு செய்யாத நிலையிலும், தமிழ்நாடு அரசின் நிதியிலிருந்து 360 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து பணிகளை மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

மேலும், மீனவக் கிராமங்களில் கடல் அரிப்பைத் தடுக்கவும், படகுகளின் பாதுகாப்பை உறுதி செய்யவும் உரிய உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட ஏதுவாக கடலோர மேலாண்மை திட்ட வரைவு அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

மேலும், மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் அடிக்கடி கைது செய்யப்படுவதைத் தடுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஒன்றிய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வருவதாகவும், இப்பிரச்சனையில் நிரந்தரத் தீர்வினைக் காண வேண்டுமென்று பலமுறை ஒன்றிய அரசுக்குக் கடிதம் எழுதியுள்ளதோடு, மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை அமைச்சர் அவர்களும், தமிழ்நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்து வலியுறுத்தியதோடு, தொடர்ந்து இப்பிரச்சினை குறித்து நாடாளுமன்றத்திலும் வலியுறுத்தி வருவதாகவும் தெரிவித்தார்.

மீனவர்கள் சார்பில், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்களிடம் 16.2.2025 அன்று இராமநாதபுரத்தில் அளிக்கப்பட்டுள்ள கோரிக்கைகளுடன், தற்போது முதலமைச்சர் அவர்களிடம் இன்றைய தினம் அளிக்கப்பட்டுள்ள கோரிக்கைகளையும் நிறைவேற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த கடற்பாசி வளர்த்தல், மதிப்புக் கூட்டிய மீன் பொருட்கள் தயாரித்தல், ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு போன்ற திட்டங்களை செயல்படுத்துவது குறித்தும் விரைந்து பரிசீலிக்க துறை அலுவலர்களை அறிவுறுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

மீனவர்களின் உற்ற தோழனாக விளங்கும் திராவிட மாடல் அரசு, தொடர்ந்து மீனவர்களின் கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலித்து, நிச்சயம் உரிய நடவடிக்கை எடுக்கும் என்றும் தெரிவித்தார்.

இராமநாதபுரம் மாவட்ட மீனவர் சங்க பிரதிநிதிகள், தங்களது பல்வேறு பிரச்சினைகள் மற்றும் கோரிக்கைகள் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு வருவதற்காக தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

இச்சந்திப்பின்போது, மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருமதி கனிமொழி, நவாஸ் கனி, சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்சா முத்துராமலிங்கம், மாநில மீனவர் அணிச் செயலாளர் டாக்டர் ஜோசப் ஸ்டாலின், துணைச் செயலாளர்கள் ரவிச்சந்திரன், ராமவன்னி, வீ.பொன்னரசு ஆகியோர் உடனிருந்தனர்.

## நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

**நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றி வரும் எஸ்.எம். மதுரா செந்தில் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக திரு.கே.எஸ்.மூர்த்தி** (1/125எப், குடி தெரு, கொத்தமங்கலம் அஞ்சல், பரமத்திவேலூர் வட்டம், நாமக்கல் - 637213) **அவர்கள் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.**

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை-18
நாள்- 18.02.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

### திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி

## மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக இளைஞர் அணி நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

### பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகிறார்!

*திருவண்ணாமலை, பிப்.20 -*

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக இளைஞர் அணி நிர்வாகிகள் அறிமுகம் மற்றும் ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது. கூட்டத்தில் கலந்து கொண்டு, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு சிறப்புரை யாற்றுகிறார்.

23.02.2025 ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு, திருவண்ணாமலை, திருக்கோயிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக இளைஞர் அணி நிர்வாகிகள் அறிமுகம் மற்றும் ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

கூட்டத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட இளைஞரணி அமைப்பாளருமான சி.என்.அண்ணாதுரை தலைமை வகிக்கிறார்.

மாவட்ட திமுக இளைஞர் அணி துணை அமைப்பாளர் எஸ்.கண்ணதாசன், கோ.ராஜசேகர், எம். ரமேஷ், எஸ்.சதிஷ்குமார், டி.திலிப்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சு.ராஜாங்கம் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

கூட்டத்தில் கலந்து கொண்டு மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக இளைஞர் அணி நிர்வாகிகளை அறிமுகப்படுத்தி, பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரையாற்றுகிறார்.

நிகழ்ச்சியில் சட்டப் பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, கழக மருத்துவரணி துணை தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், மாநில இளைஞரணி துணை செயலாளர் க.பிரபு கஜேந்திரன்,

மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொன்.முத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம்,

மாவட்ட துணை செயலாளர்கள் ப்ரியா ப.விஜயரங்கன், விஜயலட்சுமி ரமேஷ், மாநில தொ.மு.ச., துணைத் தலைவர் க. சௌந்தரராசன், செய்தி தொடர்பு இணைச் செயலாளர் சிவஜெயராஜ், நகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன்,

ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு.பன்னீர்செல்வம், வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி.ஆறுமுகம், சி.சுந்தரபாண்டியன், மெய்யூர்.சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், ப.கேசவன், கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க.சுப்பிரமணி, இரா.ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி.ஆறுமுகம், பா.ராமஜெயம், த.செந்தில்குமார், அ.ஏழுமலை, த.மனோகரன்,

பேரூர் செயலாளர்கள் சி.கே.அன்பு, ப.முருகையன், மு.அன்பழகன், எம்.சீனுவாசன் மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் உட்பட ஏரளமானோர் கலந்து கொள்கின்றனர்

நிறைவாக நகர இளைஞர் அணி அமைப்பாளர் மண்டி ஆ.பிரகாஷ் நன்றி கூறுகிறார்.

### மயிலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில்

## ரூ. 37.50 லட்சம் மதிப்பீட்டில் 9 ஊராட்சிகளுக்கு மின்கலன் வண்டிகள்!

### செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கொடியசைத்து தொடங்கிவைத்தார்!

*செஞ்சி, பிப். 20 -*

*மயிலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ரூபாய் 37.50 லட்சம் மதிப்பீட்டில் 9 ஊராட்சிகளுக்கு மின்கலன் வண்டிகளைமுன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கொடியசைத்து தொடங்கி வைத்தார்.*

*விழுப்புரம் மாவட்டம் மயிலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் தூய்மை பாரத இயக்கம் மற்றும் 15வது நிதி குழு மானிய திட்டத்தின் கீழ் ரூபாய் 37.50 லட்சம் மதிப்பீட்டில் மயிலம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஊராட்சிகளுக்கு மின்கலன் வண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.*

*மயிலம் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன் தலைமைதாங்கினார்.வட்டார வளர்ச்சி அலுவலர் சிவக்குமார் அனைவரையும் வரவேற்றார்.*

*நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு இரட்டணை, கூட்டே ரிப்பட்டு ,வீடுர், பெலா குப்பம், ஆலகிராமம், நெடி மொழியனூர், பாதிரா புலியூர் சின்ன நெற்குணம் உள்ளிட்ட 9 ஊராட்சிகளுக்கு ரூபாய் 37 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் 15 மின்கலன் வண்டிகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.*

*இதில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள்டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன், ஒன்றிய செயலாளர் மணிமாறன்,திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன்,துணை சேர்மன் புனிதா ராமஜெயம், மாவட்ட கவுன்சிலர் விஜயன், ஒன்றிய கவுன்சிலர்கள் நிவேதிதா, தனலட்சுமி ஆறுமுகம் ,சரசு முருகன், ராஜ்பரத், கண்ணன், கிருஷ்ணமூர்த்தி , நிர்வாகிகள் செல்வகுமார், பாலசுந்தரம், ஆறுமுகம், அன்சாரி, செந்தில்குமார், சுரேஷ், பிரகாஷ் ,குப்பன், நெடி சுப்பிரமணியன், தீவனூர் சேகர், பாஸ்கரன், பிரபு ,அன்பு சேகர், முனியாண்டி, உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.வட்டார வளர்ச்சி அலுவலர் மணிமாறன் அனைவருக்கும் நன்றி கூறினார்.*



திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் ஒன்றியத்திற் குட்பட்ட அனேரி ஊராட்சியில், அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.14.31 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி கட்டிடத்தை திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் திருப்பத்தூர் ஒன்றியக்குழு கழக தலைவர் விஜயாஅருணாசலம், ஒன்றிய கவுன்சிலர் காந்தி, ராஜேந்திரன், விஜயகுமார், ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் துணைத் தலைவர், வார்டு உறுப்பினர்கள், கிளை செயலாளர்கள், தோழர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

## கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

*கிருஷ்ணகிரி, பிப். 20 -*

*கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

*கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட அவசர செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் அ.யுவராஜ் தலைமையில் நாளை (21.02.2025 - வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணியளவில் ஒசூர் தளி சாலை ஆனந்த் கிராண்ட் பேலஸ் திருமண மண்டபத்தில் செயற்குழுக் கூட்டம் நடைபெற உள்ளது.*

*இக்கூட்டம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெற உள்ளது.*

*இதில் மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி செயலாளர்கள், நிர்வாகிகள், மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், இந்நாள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், வார்டு செயலா ளர்கள், கிளை செயலாளர்கள், BLA2, BLC, கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

**பொருள்:**

*1. மார்ச் 1ம் தேதி கழக தலைவர் , தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் குறித்து.*

*2. கழக ஆக்கப்பணிகள்.*

*இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*



வேலூர் மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி வேலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஒன்றியத்தில் உள்ள ஊராட்சிக்கு முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விளையாட்டு உபகரணங்களை மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., ஊராட்சி மன்ற தலைவர்களிடம் வழங்கினார். இதில் மாவட்ட ஊராட்சி குழு பெருந்தலைவர் மு.பாபு ஒன்றிய குழு, பெருந்தலைவர் அமுதா ஞானசேகரன், துணை தலைவர் மகேஸ்வரிகாசி, மாவட்ட கவுன்சிலர்கள் ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. வர்த்தகர் அணி

## மாவட்ட, மாநில அமைப்பாளர் - தலைவர்கள் கூட்டம்!

### தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம் அறிவிப்பு!

தி.மு.க. வர்த்தகர் அணி மாவட்ட, மாநில அமைப்பாளர்கள் - தலைவர்கள் கூட்டம் 23-2-2025 ஞாயிறு அன்று காலை 11.00 மணியளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், எனது தலைமையில், வர்த்தகர் அணி துணைத் தலைவர்கள் கே.எஸ்.மூர்த்தி, முனைவர் கோவி. செழியன், பழஞ்சூர் கே.செல்வம், வர்த்தகர் அணி இணைச் செயலாளர்கள் மாலைராஜா, வி.ஜெயன், கோவை நா. முருகவேல், பி.டி. பாண்டிச்செல்வம், எஸ். முத்துச்செல்வி, என். தாமரைபாரதி, எஸ்.ஆர்.எஸ். உமரிசங்கர், வர்த்தகர் அணித் துணைச் செயலாளர்கள் ஐ. கென்னடி, டி.ஆர். முத்துச்சாமி, எம்.எஸ். அசோக் பாண்டியன், மீஞ்சூர் கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், சிவகாசி த. வனராஜ், வி.பி. மணி, இ.ராமர், க. தனசெல்வம், பெ. சுந்தரவரதன், வே.பல்லவிராஜா, வி.எஸ்.ராமகிருஷ்ணன், பி.தர்மசெல்வன், ஆ.சத்தியமூர்த்தி, குன்னம் ராஜேந்திரன், கிருஷ்ணகிரி கே.வி.எஸ்.சீனிவாசன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்ட மற்றும் மாநில அமைப்பாளர்கள் - தலைவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள் விழா.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 18.02.2025

**காசி முத்துமாணிக்கம்**
செயலாளர்,
தி.மு.க. வர்த்தகர் அணி.



திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. அவசர கூட்டம் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பேசினார். அருகில் மாவட்ட அவைத்தலைவர் ஆர். எஸ்.ஆனந்தன், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி, மாவட்டப் பொருளாளர் ஜோதிராஜன், மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.கே.எம்.மோகன், ஆ.சம்பத்குமார், நகர கழக செயலாளர் எஸ்.ராஜேந்திரன் மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் என்.கே.ஆர்.சூரியகுமார் மற்றும் மாவட்டக் கழக, நகர, ஒன்றிய, பேரூர் செயலாளர்கள், அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.